DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 85/2018 | Date | : | 20.06.2025 |
| Deposition of Witness for | : | **அ.சா**.1 | Taluk | : | |
| Name | : | **அஞ்சலிதேவி** | Calling | : | |
| Husband Name | : | **பிரபு** | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.06.2025

(1 **மற்றும்** 3**ம் எதிரிகள் ஆஜர்**. 2**ம் எதிரி ஆஜர் இல்லை**. 2**ம் எதிரியின் சார்பாக கு.வி.மு.ச**. 317 **ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

**நான் பெரியார் நகரில் குடியிருந்து கொண்டு கட்டப்பை தைக்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவர் மற்றும் முத்துசாமி எனக்குத் தெரியும். நான்** 29.06.2015 **ஆம் தேதி அன்று மாலை சுமார்** 4.30 **மணி அளவில் எனது கட்டப்பை குடோனுக்கு சென்று கொண்டிருந்தேன். எனது குடோனுக்கு அருகில் உள்ள எனது கொழுந்தனாரின் குடோன் வழக்கு காரணமாக பூட்டப்பட்டு இருந்தது ஆனால் பூட்டப்பட்டு இருந்த அந்த குடோன் அன்றைய தினம் திறந்திருந்தது. நான் அருகில் சென்று பார்த்த போது நான்கு நபர்கள் அந்த குடோனுக்குள் இருந்தார்கள். நான் அவர்களிடம் நீங்கள் யார் எதற்காக குடோனுக்குள் வந்தீர்கள் என்று கேட்டதற்கு எதிரி வரதராஜன் என்னை பார்த்து நீ யார் அதை கேட்பதற்கு உன்னால் என்னை ஒன்றும் செய்ய முடியாது என வார்த்தைகள் பேசி பக்கத்தில் இருந்த இரும்புத்துண்டை எடுத்து என்னை அடிக்க முயற்சி செய்தார். அப்போது வரதராஜ் என்னைஅந்த கம்பியால் வலது தொடையில் அடித்துவிட்டார். எதிரி வரதராஜன் என்னை அடித்த கம்பியை என்னால் அடையாளம் காட்ட முடியும் தற்போது நீதிமன்றத்தில் உள்ள கம்பியால் தான் எதிரி என்னை அடித்தார் (இரும்பு கம்பி அ.சா.பொ.**1 **ஆக குறியீடுசெய்யப்படுகிறது) எதிரி முத்துசாமி என்பவர் என்னை தகாத வார்த்தைகளால் பேசினார். அங்கிருந்த எதிரி அன்பழகன் பார்க்கிறாயா? நீ என்னை கேள்வி கேட்கிறாயா உன்னை நான் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நான் கீழே விழுந்து விட்டேன். அப்போது அந்த வழியாக வந்த எனது கணவர் என்னை பார்த்து நண்பர்களின் உதவியுடன் பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார் என்னுடன் எனது கொழுந்தனார் பிரகாஷ் என்பவரும் வந்தார். நான் மருத்துவமனையில் இருந்த போது**

சித்தோடு போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்று சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் அளித்த புகார் வாக்குமூலம் தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
. Erode

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 85/2018 | Date | : 20.06.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : பிரகாஷ் | Calling | : |
| Father Name | : சின்னுசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.06.2025

(1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரியின் சார்பாக கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

நான் பவானி காளிங்கராயன் பாளையத்தில் குடியிருந்து கொண்டு கவுந்தப்பாடி ரோட்டில் உள்ள பெரியார் நகரில் பாலாஜி என்பவருக்கு சொந்தமான குடோனில் நூல் வியாபாரம் செய்து வருகிறேன். நான் எதிரி அன்பாக என்னிடம் தொழில் நிமித்தமாக கடன் பெற்றிருந்தேன். அதற்காக அவர் என்னிடம் பத்திரத்தில் கையெழுத்து பெற்றிருந்தார் அவர் கடனை திருப்பித் தருமாறும் இல்லாவிட்டால் அந்த குடோனை அவருக்கு தருமாறும் கேட்டார். நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் குடோனை தர மறுத்து குடோனை பூட்டி விட்டேன். கடந்த 29.06.2015ஆம் தேதி அன்று மாலை சுமார் 4:30 மணியளவில் எனது அண்ணன் மனைவி அஞ்சலிதேவி அ.சா.1 என்பவர் எனது குடோனுக்கு பக்கத்தில் உள்ள அவரது குடோனுக்கு சென்றிருந்ததாகவும் அப்போது எனது குடோனை திறந்து எதிரிகள் மூவரும் குடோனுக்குள் இருந்ததாகவும் எனது அண்ணி அங்கு சென்று இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்களை கேட்டதாகவும் அப்போது எதிரிகள் மூவரும் எனது அண்ணியை தகாத வார்த்தைகளால் திட்டி அடித்து விட்டதாக துரைசாமி என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் உடனடியாக அங்கு சென்றேன் நான் அங்கு சென்ற போது எதிரிகள் தகராறு செய்து கொண்டு இருந்தார்கள் அப்போது என் அண்ணனும் அங்கு வந்துவிட்டார். அவர்கள் எனது அண்ணியை அடித்திருந்தார்கள் எதிரிகள் கையில் வைத்திருந்த கம்பியை அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். பிறகு நானும் எனது அண்ணனும் எனது அண்ணியை பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம் வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை**

**சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
. Erode